## கோவை - அவினாசி சாலையில்

# நீச்சல் குளத்துடன் கூடிய வீடுகள்: காஸா கிராண்டே நிறுவனம் கட்டுகிறது

கோவை,பிப்.12:

காஸா கிராண்டே நிறுவனம் டிசைனர் லக்ஸரி வில்லாஸ் என்ற தனித்துவம் வாய்ந்த வில்லா திட்டம் மூலம் கோவையில் அடியெடுத்து வைக்கிறது.

இது குறித்து காஸா கிராண்டே நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் அருண்குமார், நிர்வாக பங்குதாரர் செந்தில்குமார் ஆகியோர் கூறியதாவது:

எங்களது நிறுவனம் இதுவரை 24 குடியிருப்பு திட்டங்களில் 1000 பேரின் விருப்பங்களை நிறைவேற்றியுள்ளது. தரமான வாழ்விடம், வெளிப்படையாக, நேர்மையாக இருத்தல், ஆர்வத்துடன் சிறப்பாகச் செயல்படுத்துதல் ஆகியவை மூலம் அந்த விருப்பங்களை நிறைவேற்றித் தருகிறது.

சென்னையில் செயல்படுத்தப்பட்ட திட்டங்களுக்குப் பின்னர், வாடிக்கையாளர்களுக்கு சிறந்த சேவையை அளிக்க எங்களது அடுத்த வாய்ப்பாக கோவை அமைந்தது.

கோவை காளப்பட்டி - குரும்பாளையம் சாலையில் உள்ள ஏர்போர்ட் ஜங்ஷனில் இருந்து 7 கிலோ மீட்டர் தொலைவில் அவினாசி சாலையில் 5 ஏக்கரில் அமையவுள்ள இந்த டிசைனர் லக்ஸரி வில்லாஸ் திட்டம் 3 பெட்ரூம்களை கொண்டது. இதில் 90 வீடுகள் பாதி தனி வில்லாவாகவும் மற்றும் 4 பெட்ரூம்களை கொண்ட தனி வில்லாக்களையும் உள்ளடக்கியது ஆகும்.

1600 சதுர அடி முதல் 2000 சதுர அடி வரை கொண்ட இந்த வில்லாக்களின் விலை 50 லட்சம் ரூபாய் முதல் 70 லட்ச ரூபாய் வரை ஆகும். பசுமையான பிரதேசத்துக்கு மத்தியில் அமைய உள்ள இந்த வில்லாக்களில் நீச்சல் குளத்துடன் கூடிய கிளப் ஹவுஸ், விருந்தினர் அறைகள், ஹெல்த் கிளப், உள்நாட்டு கட்டமைப்புக்கு ஏற்றவாறு கலை அம்சங்களுடன் கட்டப்பட உள்ளன என்று தெரிவித்தனர்.